R4747

## THE RANSOM AND THE CHURCH

## மீட்கும் பொருளும் சபையும்

“எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவரே.” 1தீமோத்தேயு 2:6

மீட்கும் பொருள் (Ransom) என்ற வார்த்தை வேத வாக்கியங்களில் இரண்டு வெவ்வேறு பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பொருள், மேலே உள்ள வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொன்று “அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பேன்.”(Ransom) (ஓசியா 13:14) பின்னால் சொல்லப்பட்ட வசனத்தில் ரேன்சம் என்ற ஆங்கில வார்த்தை பாதாளத்திலிருந்து விடுவிப்பதை, பாதாளத்திலிருந்து இரட்சிப்பதை குறிக்கிறது. முதல் வசனத்தில் ரேன்சம் என்ற வார்த்தை மீட்கும் பொருளின் விலைக்கிரயம், ஒரு மனிதனுக்கான மீட்கும் பொருளின் கிரயம், மீட்கும் பொருள் “மனிதனாகிய கிறிஸ்து இயேசுவினால்” கொடுக்கப்பட்டது என்பதையும் நாம் புரிந்துகொள்ளுகிறோம். நமது கர்த்தர் மீட்கும் பொருளின் கிரயத்தை, அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றது முதல் கல்வாரியில் அவரது மரணம் வரை உள்ள மூன்றரை வருட காலத்தில் கொடுத்தார். ஆனால் அந்த சமயத்தில் அவர் அதை பயன்படுத்தவில்லை. (ஆனால் பின்னர் “நமக்காக சபைக்காக, தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றிய பொழுது”) முழு உலகத்திற்காகவும் அதை இன்னும் பயன்படுத்தவில்லை. எனினும் உலகிற்காக “ஏற்ற காலத்தில்” அதை பயன்படுத்துவார். இப்பொழுது அவர் அதை ஒருசிறு வகுப்பாருக்காக அவர்கள் பிதாவானவரினிடத்தில் ஏற்றுக்கொள்ளும்படியாகவும், “கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக” அவருடைய பாடுகளில் பங்குபெறும்படியாகவும், அவரது மாபெரும் மகிமையிலும் தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராக அவரது பெரிய அலுவலில் பங்கு பெறவும் தமது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணிக்கொண்டிருக்கிறார்.

இப்படியாக சபையானது, பாவநிவாரண பலியில் ஒரு பங்காக இருக்கும்படியாக தற்கால பாடுகளில் அதன் கர்த்தருடன் ஒரு பங்கை பெறும். இது, அவர்கள் மீட்கும் பொருளில் பங்கு பெறுவார்கள் என்பதைக் குறிக்காது. ஏனெனில் மீட்கும் பொருளின் விலைக்கிரயம் என்பது ஒரு மனிதன் மட்டுமே, அநேக மனிதர்கள் அல்ல. ஆகையால் சபையின் பங்கு, பாவ நிவாரண பலியின் பங்காக, நமது கர்த்தரின் மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. பாவ நிவாரண பலியில் கூட சபையானது பாவ நிவாரண பலியை கொடுக்கவில்லை. பிரதான ஆசாரியன் ஒரு காளையையும் மேலும் அவரே ஒரு ஆட்டுக்கடாவையும் பலி கொடுத்தார். காளையை பிரதான ஆசாரியனும், நம்மை பலியாக ஒப்புக்கொடுத்தாலும், உதவி ஆசாரியர்கள் ஆட்டுக்கடாவையும் பலி கொடுக்கவில்லை. இரண்டையும் பிரதான ஆசாரியனே பலி கொடுத்தார். அதிக பட்சம் நாம் பிரியமான பலிகளாயிருக்கும்படி நாம் அர்ப்பணம் பண்ண முடியும். பிறகு பிரதான ஆசாரியனே வந்து அவரது புண்ணியத்தை சாட்டுதல் செய்து, “ஆட்டுக்கடா”வினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இந்த வகுப்பாரின் பலியை பிரியமானதாக ஆக்குகிறார். இப்படியாக நம் ஆண்டவர் செய்ததுபோல நாம் பாவ நிவாரண பலியில் பங்குபெறவில்லை என்பது தெரிகிறது. பிரதான ஆசாரியனின் பலி இரண்டு பகுதியாக இருந்தது. ஒன்று “காளை” மற்றொன்று “ஆட்டுக்கடா.” காளை பிரதான ஆசாரியனையும் ஆட்டுக்கடா அவரது சீஷர்களையும் குறிக்கிறது.

### பாவ நிவாரண பலியில் நமது பங்கு ஒரு சலுகை

யாராவது ஒருவர், பிறகு சபை எங்கே தோன்றும் என்று கேட்கலாம். “ஆட்டுக்கடா”வில் சபை தோன்றாது என்று நாம் பதிலளிக்கிறோம். ஆனால் அர்ப்பணம் பண்ணப்பட்ட மானிடர்கள் பலியிடப்பட்ட ஆட்டுக்கடாவை குறிக்கிறார்கள். பலி கொடுக்கப்பட்ட போது (பிரதான ஆசாரியனின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டு) நாம் உதவி ஆசாரியர்களாக, பிரதான ஆசாரியனின் அங்கங்களாகிறோம். அதிலிருந்து அவரது அங்கங்களாக அவருடன் நன்மையான எல்லா காரியங்களிலும் பலியாகவும் வேறு விதமாகவும் ஒருபங்கை பெறுகிறோம். ஆனால் பரிசுத்த ஸ்தலத்தில் நமக்கு தனிப்பட்ட அடையாளமில்லை. பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள புது சிருஷ்டியாக குறிப்பிடப்படுகிறது. தனிப்பட்ட முறையில் புது சிருஷ்டியாக பிரதான ஆசாரியரிலிருந்து பிரிக்கப்படாமல், தெய்வீக திட்டத்தின்படி அவரது சரீரத்தின் ஒரு அங்கமாக அவரது வஸ்திரத்தின் கீழும் அவரது புண்ணியத்தின் கீழும் உள்ளே வருகிறார்கள்.

இந்த கருத்தை பின்பற்றி: சபையானது நமது கர்த்தரை பின்தொடர்ந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு உதவி ஆசாரியர்களாக சென்று, நமது கர்த்தர் தமது இரத்தத்தை அங்கே தெளித்தது போல நாமும் நமது இரத்தத்தை தெளிப்போம் என்று எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. மாறாக, பிரதான ஆசாரியனே காளையின் இரத்தத்தை தெளித்து பிறகு அவரே தமது சொந்த சரீரமாக ஆட்டுக்கடாவின இரத்தத்தையும் தெளித்தார். ஆகையால் நாம் தனிப்பட்டவர்களாக அங்கே செய்வதற்கு ஒன்றுமில்லை. நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகி அவரது நாமத்தை எடுத்துக்கொள்ளுவதால் நாம் நமது தனித்தன்மையை இழக்கிறோம். ஆகையால் நாம் அவரது மகிமையிலும் அவரது வேலையிலும் பங்கு பெறுவோம்.

### “நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம்”

எனினும் திரைக்குப்பின்னால் நமக்கு தனித்துவம் இருக்காது என்று நாம் அர்த்தப்படுத்தவில்லை. ஏனெனில் நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று வேத வாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கிறது. நாம் மகிமையான அலுவலகத்தைப் பொருத்தவரை நாம் தனித்துவத்தை பெற்றிருக்க மாட்டோம் என்பதே இதன் கருத்து. ஆனால் ஒரே ஒரு மெல்கிசேதேக் ஆசாரியரே இருக்கிறார். மற்றவர்கள் அனைவரும் பார்வையை இழந்திருப்பார்கள். அங்கே ராஜரீக ஆசாரிய அலுவலகம் இருக்கும். “சரீரமாகிய சபைக்கு எல்லாவற்றிற்கும் மேலான தலையாகிய” அவருடனான நமது உறவில் அதன் அனைத்திலும் நாம் பங்கு பெறுவோம். ஆகையால் தனிப்பட்டவர்களாக பலியில் நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை. தெய்வீக நிலைப்பாட்டின்படி, பாவ நிவாரண பலியின் வேலையில் நாம் பெற்றிருக்கும் இணைப்பு எல்லாம் அங்கீகரிக்கப்பட்டு, கிறிஸ்துவின் வேலையில் அடக்கப்பட்டுள்ளது. அது அவருடைய வேலை.

உலகத்திற்கான பாவ நிவாரண பலியில் சபையின் பங்கு அவசியம் என்பது கிடையாது. ஆனால் தெய்வீக ஏற்பாட்டினால் நாம் கிறிஸ்துவுக்குள் பரவும் அவரது மகிமையான உயர்ந்த சுபாவத்திலும் வேலையிலும் பங்குபெறவும் அனுமதிக்கிறது. பாடுபடுவது என்பது சபைக்கான வெறும் ஒரு சலுகையாக இருக்கிறது. மேலும் அது முழுவதும் தேவையற்றது. தெய்வீக தண்டனையாகிய மரணத்திலிருந்து உலகத்தை விடுவிப்பதற்கு தேவையானது கிறிஸ்துவின் மரணம் மட்டுமே.

நாம் பார்ப்பது போல, நமது சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிற வேலைக்கும், மகா பிரதான ஆசாரியராக நம்மை பலியாக ஒப்புக்கொடுக்கிற நமது கர்த்தரின் வேலைக்கும் உள்ள வித்தியாசத்தை நமது மனதில் தெளிவாக வைத்துக்கொள்ளுவது மிகவும் முக்கியமானதாகும். இரண்டு காரியங்களும் நிழலில் காண்பிக்கப்பட்டது போல தெளிவாக வெவ்வேறானது. வெள்ளாட்டுக்கடா ஆசாரிப்புக் கூடாரத்தின் கதவிடம் கொண்டு வந்து கட்டப்படுகிறது. இது நாம் செய்யும் பலியின் உடன்படிக்கையை சித்திரமாக காட்டுகிறது. ஆனால் ஆடானது இன்னும் பலிகொடாமல் இருந்தது. அந்த பலியை செலுத்துவதற்கு பிரதான ஆசாரியனைத் தவிர வேறு யாரும் தகுதியனாவர்கள் இல்லை. பலி என்ற வார்த்தையின் சரியான அர்த்தத்தில், பிரதான ஆசாரியன் வெள்ளாட்டுக்கடாவை பலியிடும் வேலையே ஒரே பலியாக இருந்தது.

நம்மை ஒப்புக்கொடுத்து பிதாவானவர் ஏற்றுக்கொண்ட பிறகும், நாம் புது சிருஷ்டியாகவும், அவரது சரீரத்தின் அங்கமாகவும் அதனிமித்தம் ராஜரீக ஆசாரிய அங்கங்களாகவும் ஆன பிறகும் தொடர்ச்சியான வேலை இருக்கிறது. அதாவது தினமும் நம்மை ஒப்புக்கொடுப்பது ஆகும். ஆகையால் கர்த்தராகிய இயேசு இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் பலியை தொடருகிறார். அவர் கடைசியாக இந்த யுக முடிவில் இதை நிறைவு செய்கிறார். அப்பொழுது அனைத்தும் ஒரே பலியாக நிறைவடைந்து, புது சிருஷ்டிகள் அனைவரும் மகிமையின் சரீரத்தின் அங்கங்களாக அனுமதிக்கப்படுவார்கள்.